DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : STC.No.329/2022 | Deposition of Witness for : PW1 |
| Name : ஆறுமுகநயினார் | Father/Husband Name : வெள்ளதுரை |
| Age : 67 | Village : கொமந்தான் நகர் |
| Taluk : | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07 November 2025.
Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது கொமந்தான்நகரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். எனக்கு சுப்பிரமணியபுரம் அருகில் 6 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது.

2. கடந்த 29.07.2018 அன்று மதியம் 3.30 மணியளவில் எனது தோட்டத்தில் போடப்பட்டுள்ள கம்பிவேலியை கை மற்றும் காலால் மிதித்து கம்பி வைத்து அடைத்து உடைத்து சேதப்படுத்தினார். நான் எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு எதிரி அப்படித்தான் உடைப்பேன் என்று கூறி தேவடியா மகனே, புண்டா மகனே என்று என்னை அருவருக்கத்தக்க வார்த்தைகளால் என்னை ஆபாசமாக பேசினார். சத்தம் கேட்டு பாப்பா என்பவர் வந்து எதிரியை சத்தம் போடவும், எதிரி அரிவாளை தூக்கிக் கொண்டு வந்து இன்று நீ தப்பித்துவிட்டாய் இனிமேல் இந்த பக்கம் வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்தார். உடைந்த கம்பி வேலையின் மதிப்பு ரூ.17,500/- ஆகும். நான் இதுசம்பந்தமாக நாசரேத் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. நான் பஞ்சாயத்தில் Vice President ஆக இருந்தேனா என்றால் வார்டு மெம்பராக பணியாற்றி உள்ளேன். ப.சா.2 வள்ளியம்மாள் என்னுடைய மனைவி என்றால் சரிதான். நான் போலீசாருக்கு எப்போது போன்மூலம் தகவல் சொன்னோன் என்றால் 3.15 மணிக்கு தகவல் சொல்லி 3.30 மணிக்கு போலீசார் சம்பவ இடம் வந்தார்கள். நான் காவல்நிலையத்திற்கு எப்போது சென்றேன் என்றால் உடனடியாக சென்றுவிட்டேன், சுமார் 3.30 மணியளவில் சென்றேன்.

4. புகார் மனு யார் எழுதினார் என்றால் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள், நான் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். புகார் மனுவில் அறிவேன் சாட்சியாக யாரும் கையெழுத்து போடவில்லை என்றால் எனக்கு அது குறித்து தெரியாது.

5. எதிரி ஜெபராஜ்க்கு திக்குவாய் என்றால் சரியல்ல, நன்றாக பேசுவார், எப்போதாவது அவருக்கு திக்குவாய் வரும். எதிரியால் தொடர்ச்சியாக வார்த்தைகளைக் கொண்டு பேச முடியாது என்றால் சரியல்ல.இதை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. எதிரியின் வீடு என் வயலுக்கு அருகில் தான் உள்ளது என்றால் சரிதான்.


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.11.07 17:57:49 +0530

எதிரி சிறுவயதாக இருக்கும்போதே அவருடைய அப்பா இறந்துவிட்டார் என்றால் எதிரிக்கு 15 வயது இருக்கும்போது இறந்துவிட்டார். எதிரி அவருடைய 80 வயது பாட்டி மூக்கம்மாள் என்பவருடைய பராமரிப்பில் தான் வளர்ந்து வந்தார் என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் எந்தவிதமான முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். நான் எதிரி கம்பியை மிதித்து உடைத்து சேதப்படுத்தினார் என்பதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அருவாள் கொண்டு வந்து என்னை மிரட்டினார் என்பதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. ஏற்கனவே அந்த கம்பி வேலை உடைந்திருந்தது என்றும் எதிரி வீட்டில் உள்ள ஆடு அந்த கம்பி வேலிக்குள் உள்ளே நுழைந்ததால் நான் கல்லை எடுத்து அந்த ஆட்டின் மேல் வீசினேன், அதனை எதிரி தட்டிக்கேட்ட போது ஏற்பட்ட பிரச்சனையில் இருந்து என்னை காப்பாற்றுவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நானே வேலியை சேதப்படுத்திவிட்டு, பாட்டியின் பாதுகாப்பில் வளர்ந்து வரும் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.11.07 17:57:55 +0530

Judicial Magistrate, Sathankulam.